## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் ஆலந்தூரில்

# ஆயிரம் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு பொங்கல் நலத்திட்ட உதவிகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**காஞ்சிபுரம்,ஜன.9–**

**காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் சார்பில், ஆலந்தூரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொங்கல் விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, அப்பகுதியைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர்கள் 1000 பேருக்கு பொங்கல் நலத்திட்ட உதவிகளை வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரையின் விவரம் வருமாறு:**

இந்தக் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்துக்கு இரண்டு மாதத்துக்கு ஒருமுறையாவது அண்ணன் அன்பரசன் அவர்கள் என்னை அழைத்து வந்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திவிடுவார்.

இன்றைக்கு இந்த நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து, கிட்டத்தட்ட ஆயிரம் ஆட்டோ நண்பர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய பின், அடுத்ததாக இதே காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பொங்கல் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நான்கு நிகழ்ச்சிகளை அண்ணன் அன்பரசன் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்.

முதலில் இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்து, உங்களையெல்லாம் சந்தித்து உரையாடும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த அண்ணன் அன்பரசன் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திராவிடப் பொங்கல்

இங்கு வந்திருக்கக்கூடிய அத்தனை ஆட்டோ ஓட்டுநர் நண்பர்களுக்கும் எனது ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் தலைவர் அவர்கள் ஐந்து நாட்களுக்கு முன்பு நடைபெற்ற மாவட்டச் செயலாளர் கூட்டத்தில் ஓர் அறிவிப்பை வெளியிட்டார். ``இந்த ஆண்டு பொங்கல் விழாவை நாம் `திராவிடப் பொங்கல்' விழாவாகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும், அனைத்து மக்களுக்கும் சென்றடையும் வகையில் நலத்திட்ட உதவிகளை வழங்கிட வேண்டும்'' என்று அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட்டச் செயலாளரும் நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்று என் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். இன்றைக்கு இந்த ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு வந்திருக்கிறேன். நாளை வடசென்னையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.








பொங்கல் வரை இத்தகைய சிறப்பு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற உள்ளன.

### பல்வேறு திட்டங்கள்

என்றைக்கும் மக்களோடு மக்களாகப் பயணிப்பவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். அந்த உரிமையோடுதான் உங்களையெல்லாம் சந்தித்து, இந்தப் பொங்கல் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொள்ள வந்திருக்கிறேன். கழகத்தின் சார்பாக மட்டுமன்றி, அரசின் சார்பாகவும் பொங்கல் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்வதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்.

### 10 லட்சம் மடிக்கணினிகள்

கடந்த மூன்று நாட்களில் மட்டும் பல்வேறு அறிவிப்புகள் வெளியாகியுள்ளன. உதாரணமாக, மூன்று நாட்களுக்கு முன்பு ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் 3,000 ரூபாய் பொங்கல் பரிசுத் தொகையாக வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். நேற்று முன்தினம், தமிழ்நாட்டில் இறுதி ஆண்டு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் மடிக்கணினி வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, முதற்கட்டமாக 10 லட்சம் மடிக்கணினிகளை வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் வரை ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ திட்டத்தின் கீழ் ஒரு கோடியே 13 லட்சம் பெண்களுக்கு மாதந்தோறும் உரிமைத் தொகை வழங்கப்பட்டது. இந்த மாதம் முதல் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, மேலும் 17 லட்சம் மகளிர் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இனிமேல் ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்கு உரிமைத் தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்க உள்ளார்.

### வரலாற்றில் முதல் முறை

இப்படிப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருவதால்தான், இன்றைக்கு இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக, 11.19 சதவிகித வளர்ச்சியோடு தமிழகம் திகழ்கிறது. வரலாற்றிலேயே முதல் முறையாக இரட்டை இலக்க வளர்ச்சியோடு சிறந்த மாநிலமாகவும், சிறந்த முதலமைச்சராகவும் நம் தலைவர் அவர்கள் செயலாற்றிக் கொண்டிருக்கிறார் என்றால், அதற்கு அவரைத் தேர்ந்தெடுத்த, தமிழக மக்களே பெருமைக்குரியவர்கள்.

உங்களுக்காக உழைக்க, 2026 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைய வேண்டும். அண்ணன் அன்பரசன் அவர்கள் குறிப்பிட்டது போல, இங்கு ஆயிரம் ஆட்டோ ஓட்டுநர்கள் வந்திருக்கிறீர்கள். நீங்கள் தினமும் 100 முதல் 200 பேரைச் சந்திக்கக் கூடியவர்கள். மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டிருப்பவர்கள்.

ஏன் மீண்டும் திராவிட மாடல் அரசு அமைய வேண்டும் என்பதையும், இந்த நான்கரை ஆண்டுகளில் செய்துள்ள சாதனைகளையும் நீங்கள் மக்களிடம் கொண்டு சேர்த்தால், மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைவது உறுதி. அந்தப் பிரச்சாரத்தை நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு, உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை பொங்கல் நல்வாழ்த்துகளைக் கூறி, சிறப்பான ஏற்பாடுகளைச் செய்த அண்ணன் அன்பரசன் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் தா.மோ.அன்பரசன், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி மாநிலத் துணைச் செயலாளர் தமிழ்மாறன், சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் சாய் ஜெயகாந்த், பத்மபிரியா, மாவட்டப் பொருளாளர் விஸ்வநாதன், நகர செயலாளர் பாபு, பகுதி கழகச் செயலாளர்கள் குணாளன், சந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் வந்தே மாதரம், ஜி.கே.ரவி, மாங்காடு ஜாபருல்லா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பேராசிரியர் பிரபு, மாநகர அமைப்பாளர் சத்திய பிரபு, இளைஞர் அணியின் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் தையூர் விஜயகுமார், ராமமூர்த்தி, கமலக்கண்ணன், தினேஷ், மாநகரத் துணை அமைப்பாளர்கள் ராஜேஷ், இன்சமாம், கார்த்திக் , மற்றும் கழகத்தின் அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் சாமுவேல் தங்கம் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

---

### பெரம்பலூர் ஒன்றிய தி.மு.க.சார்பில், துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா!

## தெருமுனைப் பிரச்சார கூட்டம் - வெற்றி வாக்குச்சாவடி சிறப்புக்கூட்டம்!

### க.நாகநந்தினி யுவராஜ், – வீ.ஜெகதீசன் சிறப்புரை!

பெரம்பலூர், ஜன. 9-

பெரம்பலூர் ஒன்றிய தி.மு.க.சார்பில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, பெரம்பலூர் ஒன்றிய கழகச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எம்.இராஜ் குமார் தலைமையில், பொதுக்குழு உறுப்பினர் செ.அண்ணாதுரை

வரவேற்புரையில், ஒன்றிய துணைச் செயலாளர் தேவகிருடராஜன், நா.ஆதித்யன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மீனா அண்ணாதுரை, ஒன்றிய பொருளாளர் இரா.கலையரசன், ஒன்றிய அவைத்தலைவர் மு.இராமச்சந்திரன்,

கிளைச் செயலாளர்கள் பி. ஜெயராமன், சி.கலையரசன், மா.கார்த்திகேயன், ரா.சஞ்சீவ் குமார், பெ.திலகேஷ்வரன், மாவட்ட பிரதிநிதிகள் வா.இராஜ் குமார், சி.இரமேஷ், சு.பிரபு ஆகியோர் முன்னிலையில் தெருமுனைப் பிரச்சார கூட்டம் மற்றும் வெற்றி வாக்குச்சாவடி சிறப்புக்கூட்டம் வடக்கு மாதவி கிராமத்தில் நடைபெற்றது.

இந்த தெருமுனைப் பிரச்சார கூட்டத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் கழக செய்தி தொடர்பாளர் க.நாகநந்தினி யுவராஜ் கலந்து கொண்டுசிறப்புரையாற்றினார்கள்.

இதில் தி.மு.க. அரசின் சாதனைகளையும், செயல்படுத்தப் பட்ட திட்டங் களையும் விரிவாக எடுத்து கூறினார்கள். தலைமை கழக பேச்சாளர்கள் எசனை ஆறுமுகம், மு.விஜயரத்தினம், எஸ்.ஆர்.டி.ராமலிங்கம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு அமைப் பாளர் ஆர்.குமார், லெட்சுமணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வடக்கு மாதவி கிளைச் செயலாளர் ரா.சதீஷ்குமார் நன்றியுரையாற்றினார்.



நீலகிரி மாவட்டம் தங்காடு உதகை வழித்தடத்தில் இயங்கும் மினி பேருந்து மணலாடா பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து 150 அடி பள்ளத்தில் விவசாய நிலத்திற்குள் விழுந்தது. மினி பேருந்தில் பயணம் செய்த 20க்கும் மேற்பட்ட பயணிகள் காயம் அடைந்தனர் . விபத்துக்குள்ளானவர்களை அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் நேரில் சென்று காயமடைந்தவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகளை கேட்டறிந்து,குடும்பத்தினருக்கு ஆறுதலை கூறினார்.



சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. வாழப்பாடி வடக்கு ஒன்றியத்தில் ஒன்றிய அளவிலான மாபெரும் கபடி போட்டிசேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. ஆலோசனையின் படி ஆத்தூர் சேகர், தமிழ்செல்வன், முனைவர் சீனிவாசன், பழனிசாமி, பி.சி.செல்வம், சுப்ரமணியன், சோலை கோவிந்தன் ஆகியோர் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினர்.

---

### துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

## சேலம் கிழக்கு - வாழப்பாடியில் கபடிப்போட்டி!

### எஸ்.சி.சக்கரவர்த்தி தலைமையில்!

சேலம். ஜன.9-

சேலம் கிழக்குய மாவட்ட தி.மு.க. வாழப்பாடி வடக்கு ஒன்றியத்தில் ஒன்றிய அளவிலான மாபெரும் கபடி போட்டிசேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ் ஆர் சிவலிங்கம் எம்.பி. அவர்களின் ஆலோசனையின் படி வாழப்பாடி வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் எஸ் சி சக்கரவர்த்தி தலைமையில் வாழப்பாடி தேர்தல் பொறுப்பாளர் சேலம் கிழக்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஆத்தூர் சேகர், ஏற்காடு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழ்செல்வன், சேலம் கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் சீனிவாசன்,

சேலம் கிழக்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பழனிசாமி, வாழப்பாடி பேரூர் செயலாளர் பி.சி.செல்வம், பேளூர் பேரூர் செயலாளர் சுப்ரமணியன், வாழப்பாடி வடக்கு ஒன்றிய அவைத் தலைவர் சோலை கோவிந்தன், பேளூர் நகர அவைத் தலைவர் ராமகிருஷ்ணன் காங்கிரஸ் சேலம் கிழக்கு மாவட்ட துணை தலைவர் ராஜா,வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர்கள் சேட்டு (எ) ஆறுமுகம், குறிச்சி பெரியசாமி, மாவட்ட பிரதிநிதி அப்பாதுரை, சேலம் கிழக்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர்கள் கலைச் செல்வன், வேலவன்,வாழப்பாடி வடக்கு ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் குறிச்சி நடராஜன்,அத்தனூர்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாரதி, ஒன்றிய இளைஞரணி அமைப் பாளர் சேகர், சேசன்சாவடி கிளை செயலாளர்கள் மகாலிங்கம், ஜெயவேல், இமயவர்மன், கலியன், பழனிசாமி,

காட்டுவாப்பிலை பட்டி ஊராட்சி செயலாளர் கோவிந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் இதில் 20த் திற்கும் மேற்பட்ட கபடி குழுவினர் விளையாடி அதில் முதல் மூன்று இடத்தை பிடித்த நபர்களுக்கு வாழப்பாடி வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் சக்கரவர்த்தி, ஆத்தூர் சேகர், தமிழ்செல்வர், மாவட்ட பிரதிநிதி நடுப்பட்டி ஜெயராமன், பழனிசாமி, ஆகியோர் முதல் பரிசு ரூபாய் 10,000, இரண்டாம் ரூபாய். 7,500,மூன்றாம் பரிசு 3000, நான்காம் பரிசு 2000 வழங்கினர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சீத்தா வேதநாயகம்
### சனவரி 9 (2019)



**கழகக் கொள்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்டு, பள்ளிப் பருவத்திலேயே இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**புதுச்சேரி மாநிலத்தில், பகுதிச் செயலாளர், துணைத் தலைவர், மாநிலக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில அவைத்தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**புதுச்சேரி நகர்மன்ற உறுப்பினராக மூன்று முறையும் – சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**புதுச்சேரியில் பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் தலைவராகவும் – துணைத் தலைவராகவும் பதவி வகித்தவர்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.